Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.284/2023

**Depositions of PW- 4**

| Name | திருமதி. ஜோதி | Occupation | சார்பு ஆய்வாளர் |
|---|---|---|---|
| Husband name | வைரமுத்து | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of August 2026.

05.08.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மாவட்ட குற்றபிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2023ம் வருடம் மல்லி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது குற்ற எண்.64/2022 வழக்கின் சொத்துக்களான 591 மதுபான பாட்டில்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்து பிஆர்எண்.128/2023 பெற்றும் வழக்கு கோப்பினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். பின்னர் 20.04.2023 அன்று மேற்படி வழக்கின் எதிரிகளான வனராஜ் மற்றும் மாரிச்செல்வம் இருவருக்கும் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

இவ்வழக்கின் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தைக் காட்டக்கூடிய பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக கூறப்படும் மேற்படி சந்திரன் என்பவரை நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் பை எதுவும் கைப்பற்றப்பட்டதா என்றால் இவ்வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டு காவல்நிலையத்தில் வைக்கப்பட்ட பின்னர் தான் இவ்வழக்கு கோப்பை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டதால்

அதுபற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் எதிரியிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. எதிரி அதிக விலைக்கு மதுபானம் விற்பனை செய்தார்களா என்பது பற்றி சாட்சிகளை விசாரித்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சாட்சிகள் போலீசார் விசாரணையில் கொடுத்த வாக்குமூலத்தில் இவ்வழக்கின் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவோ எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவோ தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

நான் சம்பவயிடம் சென்று இவ்வழக்கு சம்மந்தமாக புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். எதிரி மதுபான பார் நடத்திவருவதாக இவ்வழக்கில் நான் குறிப்பிடவில்லை. இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் இவ்வழக்கின் மற்றொரு எதிரியான மாரிச்செல்வம் என்பவருக்கும் சேர்த்து இந்நீதிமன்றத்திலேயே குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அத்தாட்சியில் இவ்வழக்கின் எதிரியிடம் கையெழுத்து பெறப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் இவ்வழக்கின் கோப்புகளை பார்வையிட்டு விசாரணை மேற்கொள்ளாமல் எதிரி மீது பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் எதிரியிடமிருந்து இவ்வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.